**மொனராகலை பிரதேச சபை**

**மொனராகலை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொனராகலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குக் கிடைத்திருந்த திகதி வெளிப்படுத்தப்படாத சபைக்குச் சொந்தமான பழைய தீ அணைக்கும் வாகனத்தின் கிரயம் அல்லது நியாயமான பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த உள்ளூராட்சி ஓய்வூதிய நிதிய மீதி ரூபா 2,813,108 ஆகக் காணப்பட்ட போதிலும் அவை ரூபா 115,478 தொகை எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 2,697,630 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 67 காணித் துண்டுகளை தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான முன்னைய ஆண்டுகளின் போது அகற்றப்பட்டிருந்த ரூபா 755,260 தொகை பெறுமதியான 3 கட்டிடங்களின் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித்தொகுதியினதும் கிரயம் அல்லது நியாயமான பெறுமதியினைக் கணக்கீடு செய்ய வேண்டும். எனினும் சபைக்குச் சொந்தமான 04

வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித்தொகுதிகளின் காப்புறுதிப் பெறுமதியாகிய ரூபா 28,592,202 தொகையினை கணக்கீடு செய்திருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,049,734 தொகையாகக் காணப்பட்டதுடன் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 2,972,026 ஆகக் காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலமாக முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் 1987 ஆண்டின் போது சபைக்குச் சொந்தமாக இருந்த மின்சார துறையை உரித்தாக்குதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4,771,469 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1989 மற்றும் 1990 ஆண்டுகளின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 55 கடைகளை வாடகைக்கு கொடுத்த போது 11 கடைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ஆரம்ப வைப்பு ரூபா 1,178,375 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல வருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் 31 உத்தியோகத்தர்களிடம் மற்றும் ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 381,000 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

(அ) 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் நகர அபிவிருத்தி அதிகாரப் சபையினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கடைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 4,872,912 தொகையினைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவை உள்ளூராட்சி ஓய்வூதியம் ரூபா 2,813,108 தொகையினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 71,419,477 கூட்டுத்தொகைக்கான 02 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 49 ஆம் பிரிவு | திட்டமிடல் குழுவின் அங்கீகாரம் இன்றி பல்வேறு தொலைபேசிக் கம்பனிகளினால் 13 செலுத்துகை டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. |
| (ii) 132(ஓ) மற்றும் (ஔ) ஆம் பிரிவு | அமைச்சரின் அங்கீகாரம் இன்றி முன்பள்ளி உபகரணங்கள் வழங்குவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 110,620 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சபையில் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய நூலக உதவியாளர், வெளிக்கள தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர்கள், காவலாளிகள் மற்றும் இயந்திர இயக்குனர்கள் ஆகிய பதவிகளுக்காக 18 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,469,473 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,709,693 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 4,759,780 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

--------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 40,970,234 தொகையினை நிலுவை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீத வரி

-------------

(அ) மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 12,054,315 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை நடைமுறை ஆண்டின் வரி என சேகரித்திருந்தது ரூபா 2,917,066 ஆகும். அவை மொத்த சிட்டையிடப்பட்ட 24 சதவீதம் போன்ற குறைந்த சதவீதமாகக் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் வீத வரி அறவீடு மிகவும் குநைந்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதி நிலுவை வீதவரி மீதி ரூபா 18,881,615 தொகையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது அந் நிலுவையில் ரூபா 4,867,402 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவீடுகள் 23 சதவீதம் ஆகக் காணப்பட்டதுடன் வீத வரி நிலுவை வருடந்தோரும் அதிகரித்துச் சென்றிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 10,000 தொகையினை விஞ்சிய நிலுவை மீதியினை கொண்ட வீத வரி அலகுகள் 447 இல் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,093,887 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

----------------

(அ) 2010 மற்றும் 2013 ஆண்டுகளின் போது 24 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டியிருந்த நிலுவை வாடகை முறையே ரூபா 228,613 தொகை மற்றும் ரூபா 1,137,132 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 140 கடைகளில் வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,131,182 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,416,692 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.5 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள் / தங்குமிடங்களில் இருந்து குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய ஆண்டிற்காக பெறுகைகளின் நூற்றிற்கு ஒன்றை மிகைக்காத கட்டணம் ஒன்று துணை விதி ஆக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டும். எனினும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் மூன்று ஹோட்டல்கள் / தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு தொலைபேசி கம்பனிகளினால் 2004 முதல் 2012 வரை நிர்மாணிக்கப்பட்டிருந்த 13 செலுத்துகை டவர்களில் இருந்து அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 மிகை விதிப்பு

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 922,195 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 7 பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 20 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(ஆ) 2013 நவம்பர் 20 திகதி உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த 20 லீட்டர் கொண்ட 800 பிளாஸ்டிக் குப்பைப் பாத்திரங்களில் ரூபா 207,828 பெறுமதியான 753 தொகையான குப்பைப் பாத்திரங்களை விற்பனை செய்வதற்கு 2016 ஏப்ரல் 28 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 09 திகதி உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கியிருந்த 60 பிளாஸ்டிக் குப்பைப் பாத்திரங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகக் கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது

இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 991,005 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபையின் முன்னைய இரண்டு அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 32 கல்வணய்ஸ் குழாய்களை 2016 ஏப்ரல் 27 திகதி வரை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

சபைக்குக் கிடைத்திருந்த பெக்கோ லோடர், யூடேன் பாதை தகர்க்கும் இயந்திரம் என்பன பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

------------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் ˙ திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்